**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.65/2025** |
| Deposition of witness | : | P.W.2 |
| Name | : | இந்திராணி |
| Father's /Husband Name | : | கணேசன் |
| Village | : | எண்கண் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 50 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day of July 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது எண்கண் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது தெருவைச் சேர்ந்தவர். அ.சா.1 சுகன்யாவை எனக்கு தெரியும். நான் எண்கண் கீழக்காலணியில் சுகன்யாவுக்கு சொந்தமான வீட்டில் குடியிருந்து வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு தேதி சரியாக நியாபகமில்லை. சுமார் 05.00 மணியளவில் கார்த்திக் நான் குடியிருக்கும் வீட்டின் கூரையை பிரித்ததால் சுகன்யா வந்து யார் பிரித்தது என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் சுகன்யாவிடம் ஆஜர் எதிரி கூரையை பிரித்து விட்டார் என்று கூறினேன். ஆஜர் எதிரி முலையை அறுத்து விடுவேன் என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். ஆஜர் எதிரி திட்டியதால் அசிங்கமும் அவமானமும் ஏற்பட்டது. ஆஜர் எதிரி அ.சா.1ன் சேலையை பிடித்து இழுத்து கையால் அ.சா.1ன் கண்ணத்தில் அறைந்தார். சிமெண்ட் ரோட்டில் வைத்து தான் ஆஜர் எதிரி அ.சா.1ஐ தாக்கினார். ஆஜர் எதிரி அ.சா.1ஐ பார்த்து உன்னை பார்த்துக்கொள்கிறேன் என்று மிரட்டிவிட்டு போனார். இது சம்மந்தமாக

குடவாசல் காவல் நிலையத்தில்அ.சா.1 கொடுத்த புகாரில் போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

ஆஜர் எதிரி நான் குடியிருந்த வீட்டின் கூரையை பிச்ச போது நான் பார்த்தேன். ஆஜர் எதிரியின் மனைவிக்கு எனக்கும் அடிக்கடி சண்டை வருமா என்றால் இல்லை. நான் சொல்வது போல் நான் குடியிருக்கும் வீடு கூரை வீடு இல்லை என்றாலும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அ.சா.1 ஐ திட்டவும் இல்லை தாக்கவும் இல்லை என்றாலும் நான் சம்பவத்தின் போது வீட்டில் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே இருந்த இடப்பிரச்சனை காரணமாக அ.சா.1 கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.07.18 10:54:21 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`